

# வடக்கு மாகாணத்தை பிரித்துப் பார்க்கவில்லை

## -யாழ்.இந்திய துணைத் தூதுவர் நடராஜன்-

வடக்கு மாகாணத்தை நாங்கள் பிரித்துப் பார்ப்பதே கிடையாது. அந்த வகையில் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவிற்கு யாழ்ப்பாணத்தில் விழா இடம்பெறுவதைப் பார்த்து நான் ஆச்சரியப்படவில்லை. எப்பொழுதும் இவ்வாறான விழாக்கள் இங்கு இடம்பெற்றுக் கொண்டு தானிருக்கின்றன என யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ஆ. நடராஜன் தெரிவித்தார்.யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு முன்பாக அமைந்துள்ள யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் இடம்பெற்ற ஆராதனா மஹோற்சவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இந்த உலகத்திலுள்ள அனைவரும் நூறு சதவீதம் சரியான மனிதர்கள் எனக் கூற முடியாது. அனைவரிடமும் ஏதாவதொரு வகையில் சிறிய சிறிய குறைபாடுகள் காணப்படும். இருந்த போதும் நாம் வாழ்க்கையில் முடிந்தவரை நல்லவனாக இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். நல்லதைச் செய்ய வேண்டும். நல்லது செய்வதற்கு முன்னர் நல்லதைச் சிந்திக்க வேண்டும்.

இறைவன் எங்களை பூமிக்கு அனுப்பியிருப்பதன் நோக்கம் நாம் எங்களை விட நலிவுற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காகவே என்பதை நாம் மனதிற் கொள்ள வேண்டும். நாம் ஏனையவர்களுக்கு உதவி செய்தால் இறைவன் எங்களைப் பார்த்துக் கொள்வார். ஆகவே, நாம் முடிந்தவரை மற்றவர்களுக்கு உதவி புரிய வேண்டும். இந்த உலகத்தில் பிறக்கும் போது நாமனைவரும் சாதாரண குழந்தைகளாகவும், சமமானவர்களாகவுமே பிறக்கிறோம். ஆனால், இந்தப் பூமியை விட்டுச் செல்லும் போது தான் இந்த உலகிற்கு நாம் எதையெல்லாம் விட்டு விட்டுச் செல்கிறோம் என்பது உணர்த்தப்படுகிறது. அந்த வகையில் ஏனையவர்களுக்கு உதவி செய்வதில் பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா மிகச் சிறந்த உதாரணம். கல்வி, சுகாதாரம், மருத்துவம் பொதுவான விடயங்கள் என அவர் செய்யாத சேவைகளே கிடையாது. பாபாவினுடைய தரிசனம் கிடைக்குமா? கிடைக்காதா? என இரவு, பகலும் ஏங்கியவர்கள் பலர். அவருடைய தரிசனத்திற்காகத் தவமிருந்து கிடைக்காமற் போனவர்களும் பலருள்ளனர். பகவான் சத்தியசாயி பாபா இந்தியாவைச் சேர்ந்தவராகவிருக்கலாம். ஆன போதும் அவரொரு இந்தியன் கிடையாது.

மகாத்மாகாந்தி, தென்னாபிரிக்காவிலுள்ள நெல்சன் மண்டேலா, பகவான் சத்திய சாயி பாபா போன்றவர்கள் இந்திய நாட்டிற்கு மாத்திரம் சொந்தமானவர்கள் கிடையாது. அவர்கள் பன்னாட்டுச் சொந்தக்காரர்கள்.அவருடைய கொள்கைகள், சேவைகள் மீது பற்றுள்ளவர்கள் ஏராளமானோர் எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன் ஒரு தடவை புதுடில்லி வருகை தந்திருந்த போது அலுவலக ரீதியான சந்திப்பொன்றின் போது அவருக்கு அருகில் நிற்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியிருந்தது. இதன்போது அவர் அணிந்திருந்த மோதிரத்தை எதேச்சையாக அவதானித்தபோது சத்தியசாயி பாபாவின் புகைப்படம் இருப்பதைக் கண்டு உண்மையிலேயே ஆச்சரியமடைந்தேன். பில் கிளிண்டன் மட்டுமல்லாமல் பிரிட்டனின் முன்னாள் பிரதமர் மார்க்கிரட் தாட்சர், மறைந்த மேற்கத்தைய இசை நடனக் கலைஞர் மைக்கல் ஜாக்ஸன் ஆகியோரும் பகவான் சத்திய சாயி பாபாவைப் புசிப்பவர்களாகக் காணப்படுகின்றனர்.எகிப்து நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ஒசினி முபாரக் தனது கழுத்தில் சத்திய சாயி பாபாவின் தங்கச் சங்கிலி அணிந்திருப்பதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்கள் அனைவரும் காரணமின்றிப் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா மீது அளவற்ற நம்பிக்கை வைக்க மாட்டார்கள்.

வாழ்க்கையில் நாங்கள் நிம்மதியாக இருக்க வேண்டுமானால் சந்தோஷமாகவுமிருக்க வேண்டும். சிலர் எப்போதும் சந்தோஷமாகவே காணப்படுவார்கள். மறுபுறம் சிலர் எப்போதும் கவலையுடனேயே காணப்படுவார்கள். சந்தோஷமும் கவலையும் எமது மனதின் வெளிப்பாடுகளாகவேயுள்ளன. ஆகவே சந்தோஷம் நிலைத்திருப்பதற்கு நாம் எம்மால் முடிந்தவரை முயற்சிகள் செய்ய வேண்டும். எங்கு நட்பு, அன்பு என்பன காணப்படுகின்றதோ அங்கு நிச்சயமாக அமைதி நிலவும் எனவும் தெரிவித்தார்.